The Tamil Nadu Dr.Ambedkar Law University
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

CAG
Citizen consumer and civic Action Group

## Press Release

# World Day of Remembrance

**For immediate release** **November 22, 2022**

Adopted by the UN, the World Day of Remembrance for Road Traffic Victims (WDoR) is a day dedicated to remembering the millions killed and injured on the world's roads, together with their families, friends and many others who are also affected. WDoR is commemorated every year on the third Sunday of November. Considering the numerous crashes and fatalities that take place daily on Indian roads, this day is of enormous relevance to Indian road users.

India witnessed 1.3 million road deaths and around 5 million injuries in the last decade. Losing precious lives in road crashes are largely preventable if we collectively share the responsibility to create safer roads for all. This year's global theme is justice, which discusses the need to highlight the various socio-economic fallouts of road crashes. These include increased economic burdens, time poverty, gender differentiated trends, lack of access to education and a poor quality of life. Most of these factors are amplified in families from the lower and middle socio-economic status. It is estimated that road accidents cost India about 3% of its GDP annually.

This year, WDoR was commemorated in a joint event by CAG, the Greater Chennai Traffic Police, and the Dr. Ambedkar Law University. The programme began with a road safety quiz for students from various city colleges - JBAS, Patrician, and Dr. Ambedkar Law University. This was followed by an animation video on road safety that highlighted the need for wearing helmets, driving within speed limits, and not drinking and driving.

The Chief Guest was Thiru Shankar Jiwal, IPS, Commissioner of Police, Chennai who spoke on the efforts taken by the government on improving road safety, in particular the enforcement of road rules by the police. He highlighted the socio economic fallouts of a road crash, and that as a society, 'We need more discussions

on the causes of road crashes and how we can effectively ensure course correction.' He also felicitated the winners of the quiz competition and handed over certificates to the officers of GCTP who have done exceptional work in their line of duty.

The event also saw the participation of the Additional Transport Commissioner, Mr. M. Manakumar. He appealed to all citizens to cooperate with the authorities adding that 'Penalties have been increased as per the MVAA 2019 to act as a deterrent to risky road behaviour. They should not be perceived as harassment.' Sumana, Senior Researcher, CAG, also emphasised that “The increased penalties under MVAA 2019 being implemented in Tamil Nadu is a welcome move. This should serve as a deterrent to poor driving. Penalties are a crucial tool in nudging citizens to obey the law and thereby avoid road crashes.’ Participants also heard from two road crash victims. The event ended with a minute of silence in memory of the lives lost on the roads.

**For further information, contact: Sumana – 9445395089 | sumana.narayanan@cag.org.in**

**About CAG**

Citizen consumer & civic Action Group (CAG) is a thirty seven year old non profit and non political organisation working on citizen rights and good governance. It has worked primarily to protect the interests of consumers and citizens of Chennai even as its efforts have had state level and even national level impacts.

# உலக நினைவு தினம்

**பத்திரிக்கை வெளியீடு**

**உடனடி வெளியீட்டிற்காக,**
**சென்னை, 22 - நவம்பர் - 2022**

ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டவர்களுக்கான உலக நினைவு தினம் (WDoR) உலக சாலைகளில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பல லட்சக் கணக்கானவர்களை அவர்களின் குடும்பங்கள் மற்றும் நண்பர்களுடன் நினைவுகூர அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நாளாகும். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை இந்நாள் நினைவுபடுத்தப்படுகிறது. இந்திய சாலைகளில் தினசரி நடக்கும் எண்ணற்ற விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைக் கருத்தில் கொண்டு, இந்த நாள் இந்திய சாலைப் பயனாளர்களுக்கு மிகவும் பொருத்தமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில், சாலை விபத்துக்களால் 13 லட்சத்திற்கு மேலான மரணங்கள் மற்றும் சுமார் 5 லட்சத்து நபர்கள் காயம் அடைந்துள்ளனர். அனைவருக்கும் பாதுகாப்பான சாலைகளை உருவாக்கும் பொறுப்பை நாம் கூட்டாக பகிர்ந்து கொண்டால், சாலை விபத்துகளில் விலைமதிப்பற்ற உயிர்களை இழப்பது பெருமளவில் தடுக்கப்படும். இந்த ஆண்டிற்க்கான உலகளாவிய கருப்பொருள் "நீதி", இது சாலை விபத்துகளின் பல்வேறு சமூக-பொருளாதார வீழ்ச்சிகளை முன்னிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை விவாதிக்கிறது. அதிகரித்த பொருளாதாரச் சுமைகள், வறுமை, பாலின வேறுபாடுகள், கல்விக்கான அணுகல் இல்லாமை மற்றும் மோசமான வாழ்வாதாரம் ஆகியவை இதில் அடங்கும். இந்த காரணிகளில் பெரும்பாலானவை கீழ் மற்றும் நடுத்தர சமூக-பொருளாதார நிலையில் உள்ள பெரும்பாலான குடும்பங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சாலை விபத்துகளால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆண்டுக்கு 3% செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, சி.ஏ.ஜி., சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை மற்றும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்து "உலக நினைவு தினம் 2022" நினைவுகூரப்பட்டது. மாணவர்களுக்கான சாலைப் பாதுகாப்பு வினாடி வினாவுடன் நிகழ்ச்சி தொடங்கியது. போட்டியில் சென்னையை சேர்ந்த ஜஸ்டிஸ் பஷீர் அகமது சயீத் மகளீர் கல்லூரி, பேட்ரிசியன் கல்லூரி மற்றும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றனர். இதைத் தொடர்ந்து, ஹெல்மெட் அணிவதன் அவசியம், வேக வரம்புக்குள் வாகனம் ஓட்டுதல், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டக்கூடாது என சாலை பாதுகாப்பு குறித்த அனிமேஷன் வீடியோ காட்சிப்படுத்தப்பட்டது.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக சென்னை காவல்துறை ஆணையர் திரு சங்கர் ஜிவால் ஐபிஎஸ் கலந்து கொண்டு சாலை பாதுகாப்பை மேம்படுத்த அரசு எடுத்துள்ள முயற்சிகள், குறிப்பாக காவல்துறையினர் சாலை விதிகளை அமல்படுத்துவது குறித்து பேசினார். சாலை விபத்தின் சமூகப் பொருளாதார வீழ்ச்சிகளை அவர் எடுத்துரைத்தார். மேலும் ஒரு சமூகமாக, 'சாலை விபத்துக்கான காரணங்கள் மற்றும் பாடத் திருத்தத்தை எவ்வாறு திறம்பட உறுதி செய்வது என்பது குறித்து நமக்கு கூடுதல் விவாதங்கள் தேவை.' என்று கூறினார். வினாடி-வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு காவல் ஆணையர் பாராட்டி பரிசளித்தார். மேலும், தங்கள் கடமையில் சிறப்பாகப் பணியாற்றிய GCTP அதிகாரிகளுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர கூடுதல் போக்குவரத்து ஆணையர் திரு.எம்.மணகுமார் அவர்களும் கலந்துகொண்டார். அனைத்து குடிமக்களும் அதிகாரிகளுடன் ஒத்துழைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார், மேலும் 'அபாயகரமான சாலை நடத்தைக்கு தடையாக செயல்பட மோட்டார் வாகன திருத்தச் சட்டம் 2019இன் படி அபராதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் அதை துன்புறுத்தலாக உணரக்கூடாது.' என்று கூறினார்.

“மோட்டார் வாகனம் திருத்தச் சட்டம் - 2019ன் கீழ் உயர்த்தப்பட்ட அபராதங்கள் தமிழகத்தில் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும், இது அபாயகரமாக வாகனம் ஓட்டுவதைத் தடுக்கும். சட்டத்திற்கு கீழ்ப்படிவதற்கும், சாலை விபத்துகளைத் தவிர்ப்பதற்கும் குடிமக்களைத் தூண்டுவதில் அபராதங்கள் ஒரு முக்கியமான கருவியாகும், ”என்று சி.ஏ.ஜி.யின் மூத்த ஆராய்ச்சியாளர் சுமனா நாராயணன் கூறினார். இறுதியாக, சாலை விபத்தினால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்வு நிறைவுற்றது.

**மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: சுமனா – 9445395089 | sumana.narayanan@cag.org.in**

## சிட்டிசன் கன்சுயூமர் சிவிக் ஆக்க்ஷன் குரூப்

சிட்டிசன் கன்ஸ்யூமர் & சிவிக் ஆக்க்ஷன் குரூப் (சிஏஜி) என்பது 37 ஆண்டுகால இலாப நோக்கமற்ற, மற்றும் அரசியல் சாராத அமைப்பாகும், இது நுகர்வோர் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் குடிமக்களின் உரிமை களைப் பாதுகாப்பதற்கும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பங்கேற்பு முடிவு உள்ளிட்ட நல்லாட்சி செயல்முறைகளை மேம்படுத்துவதற்கும் செயல்படுகிறது.